# இசையொன்று இசைக்கின்றேன்

இசையொன்று இசைக்கின்றேன்
இறைவா எளிய குரல்தனிலே - 2
என் இதயத் துடிப்புக்களோ
என் இசையின் குரலுக்கு தாளங்களே - 2

**1**
காலத்தின் குரல்தனில் தேவா
உன் காலடி ஓசை கேட்கின்றது - 2
ஆதியும் அந்தமும் ஆகினாய்
மழலையின் சிரிப்பில் உன் எழில் வதனம்
மலர்ந்திடும் மண்ணிலே - 2

( இசையொன்று )

**2**
ஏழையின் வியர்வையில் இறைவா
உன் சிலுவை தியாகம் தொடர்கின்;றது
சமத்துவம் எம்மில் வாழ்ந்திட -2
உழைக்கும் கரங்கள் ஒன்றென இணைவது
விடியலின் ஆரம்பம் - 2

(இசையொன்று )